**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (29.11.2017) தஞ்சாவூரில் நடைபெற்ற புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

காவிரி தந்த கலைச்செல்வி,
காவிரியை மதி கொண்டு மீட்டெடுத்த முழுமதி
முல்லை பெரியாற்றில் முடி சூடிய முத்தமிழ்
தமிழினத்தின் தன்னிகரில்லாத் தலைவி
ஒண்ணறைக் கோடித் தொண்டர்களின்
உயிர் மூச்சு பொன்மனச் செல்வி மாண்புமிகு **புரட்சித் தலைவி அம்மா**
அவர்களை வணங்கி.

பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் சிறப்பான அற்புதமான கருத்துகளை நம்மிடத்திலே எடுத்துரைத்து இந்த விழாவில் தலைமை தாங்கி தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **ப. தனபால்** அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே எழுச்சியான உரையாற்றி
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழை எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ. பன்னீர்செல்வம்** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **மு. தம்பி துரை** அவர்களே!

இந்த மண்ணின் மைந்தர்,
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
திரு. **இரா. துரைக்கண்ணு** அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்
திரு. **ஆர். வைத்திலிங்கம்** அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அரசுச் செயலாளர்
திரு. **ரா. வெங்கடேசன்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **கு. பரசுராமன்** அவர்களே!

மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **ஆர்.கே. பாரதி மோகன்** அவர்களே!

பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்
திரு. **C. V. சேகர்** அவர்களே!

பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர்
திரு. **மா. கோவிந்தராசு** அவர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு. **பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா
திரு. **எஸ்.இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி
திரு. **என். தளவாய் சுந்தரம்** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர்
திருமதி **பா.வளர்மதி** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள
தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **A. அண்ணாத்துரை** அவர்களே!

மற்றும் இந்த விழாவிலே கலந்து கொண்டு சிறப்பித்து கொண்டிருக்கின்ற
முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே,
வருகை தந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்களே,

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! நலத் திட்டப் பயனாளிகளே!
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை
தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தை பற்றி சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால்,
தஞ்சாவூர் மாவட்டம் தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் மட்டுமல்ல,
சொற்களஞ்சியமாகவும் திகழ்கிறது.
நெல்லும், சொல்லும் இங்குதான் அதிகமாக விளைகின்றன.

**கழனியின் சேறும்,**
**கலை, இலக்கிய சாறும் கலந்த**
**ஒரு தெய்வீக பூமி இந்த பூமி.**

மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என்று
யானைகட்டி போரடித்த சோழவள நாடு என்றும்,
சோழ நாடு சோறுடைத்து என்றும்,
குபேரனின் அளகாபுரி என்றும் பலவாறாக
புகழப்படும் தஞ்சாவூர் மாவட்டம்
தமிழன்னைக்கு நெற்றித் திலகமாகத் திகழ்கிறது.

எட்டாம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆண்ட **தனஞ்செய முத்தரையரின்**
பெயரையே தன் பெயராகக் கொண்டு **உருவானது தஞ்சை** என்றும்,
**தனஞ்செய ஊர்** என்பது மருவி **“தஞ்சாவூர்** ”
என மாறியது என்றும் கூறப்படுகிறது.

சோழர்கள், பாண்டியர்கள், விஜய நகர மன்னர்கள், முத்தரையர்கள், நாயக்க
மன்னர்கள்,

மராட்டியர்கள், ஆங்கிலேயர்கள் என தஞ்சாவூர் பலரால் ஆளப்பட்டுள்ளது என்றாலும்,
ராஜராஜ சோழன் காலத்தில் தான் தஞ்சாவூர்
கலை, இலக்கியம், விவசாயம் என
அனைத்திலும் மேலோங்கி திகழ்ந்தது.

**உலக பிரசித்திப்பெற்ற இடங்களுள் ஒன்றாகவும்,** திகழும் தஞ்சை **பெருவுடையார் கோயில்**
**ராஜராஜ சோழனால்** கட்டப்பட்டது.
ராஜராஜ சோழன் தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக **தமிழ் உயிர்மெய் எழுத்துக்கள் 216–ஐ நினைவு படுத்துவதுபோல்**
இந்தக் கோவிலின் **விமானத்தை**
**216 அடி உயரத்தில்** அமைத்திருக்கிறாரோ
என எண்ணத் தோன்றுகிறது.

தமிழ் **உயிர் எழுத்துக்களில் ஆயுத எழுத்தையும் சேர்த்து** கோயிலின் நுழைவாயிலில் உள்ள
**நந்தி சிலையின் உயரத்தை 13 அடியாக**
அமைத்திருக்கலாமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

புவி அதிர்வுகளாலோ, இடி மின்னல்களாலோ
பாதிப்பு ஏற்படாத அளவிற்கு தொழில் நுட்பத்துடன் கட்டப்பட்டுள்ளதால்
**ஆயிரத்து 7 ஆண்டுகளாகியும் ராஜராஜ சோழனைப் போல் பெருவுடையார் கோயில் நிமிர்ந்து நிற்கிறது.**

மலைப்பகுதிகளே இல்லாத சோழநாட்டில்
**ஒரு லட்சத்து 30ஆயிரம் டன் எடை கொண்ட கிரானைட் கற்களால்**
**7 ஆண்டு**களில் கோயிலைக் கட்டி உலகையே வியக்க வைத்தவர் மன்னர் ராஜராஜன் என்பதற்காக ஒவ்வொரு தமிழனும் பெருமைப்பட வேண்டும்.

கோயிலின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றபோது அங்கு வேலை செய்யும் சிற்பிகளுக்கு தினமும்
தயிர், மோர் வழங்கி வந்த**அழகி என்னும் ஒரு இடையர்குல ஏழை மூதாட்டியின்** சிவ தொண்டை அனைவரும் அறியும் வண்ணம் **80** டன் எடை கொண்ட கல்லில் **"அழகி"** என்று பெயரை பொறித்து அதனை ராஜகோபுரத்தின் உச்சியில் இடம்பெறச் செய்தார் ராஜராஜ சோழன். அந்தக்

கல் **“இடைச்சி கல்”** என்று இன்றும் அழைக்கப்படுகிறது. அந்த கல்லின் நிழல்தான் **இறைவன்**
**பிரகதீஸ்வரர் மேல் விழுகிறது.**

விஜய ராகவ நாயக்கரால் கட்டப்பட்ட
**110** ஏக்கர் பரப்பளவில் **– பெரிய கோட்டை அரண்மனையில் உள்ள அருங்காட்சியகம், கலைக்கூடம், சந்திர மௌலீஸ்வரர் ஆலயம், சதார்மகால் அரண்மனை, தர்பார் கூடம்,**
**சரஸ்வதி மகால், நூலகம்** ஆகியவை தமிழர்களின் கட்டடக் கலைக்கு சான்றாக விளங்குகின்றன.

கரிகால் சோழனால் கட்டப்பட்ட மிகப்பழமையான தொழில் நுட்பத்துடன் கூடிய **கல்லணை, ராஜராஜன் மணிமண்டபம், மனோரா கோபுரம்,**
**ஷவார்ட்ஸ் தேவாலயம், சிவகங்கை பூங்கா** என்று ஏராளமான **சுற்றுலா இடங்களால் தஞ்சை நகரம்**
மற்ற நகரங்களை மிஞ்சும் நகரமாகவே திகழ்கிறது.
தாராசுரம் சிவன் கோவில்,
திருபுவனம் சரபேசுவரர் கோயில்,
திருவிடைமருதூர் சிவன்கோயில், முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை , கும்பகோணம் ராமசுவாமி திருக்கோயில்,
உப்பிலியப்பன் கோயில்,
புன்னை நல்லூர் மாரியம்மன் கோயில்,
திட்டை குரு ஸ்தலம்,
பூண்டி மாதா தேவாலயம்,
பண்டாரவாடை பெரிய பள்ளி வாசல் போன்ற வழிபாட்டுத் தலங்களால் தஞ்சாவூர் ஆன்மிகம் தழைக்கும் பூமியாகவும் திகழ்கிறது.

சுவாமிமலை சிற்பம், திருபுவனம் பட்டு,
தஞ்சாவூர் வீணை, தஞ்சாவூர் ஓவியம்,
தஞ்சாவூர் கலைத்தட்டு, தஞ்சாவூர் வெற்றிலை, தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை, நாச்சியார் கோயில் குத்துவிளக்கு
போன்றவை தஞ்சாவூர் மாவட்டத்தின் அடையாளங்களாகத் திகழ்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு
அறிவியல் தொழில் நுட்பத்துடன்
காவிரிக்கு குறுக்கே கல்லணையைக்
**கட்டிய கரிகால் சோழன்,**

எண்ணற்ற கோயில்களை புனரமைத்த
**ரகுநாத நாயக்கர்,**
தஞ்சையின் கலை, இசை, நாட்டியத்தை உலகம் அறியச் செய்த **மன்னர் இரண்டாம் சரபோஜி**,
மகாத்மா காந்திஜியின் உதவியாளராக இருந்த பொருளாதார மேதை
**ஜே.சி. குமரப்பா,** சுதந்திரப் போராட்ட வீரர் **சர். சிவசாமி அய்யர்,**
கணித மேதை **சீனிவாச ராமானுஜம்,**
கம்ப இராமயணம் தந்த **சேக்கிழார்,**
கரிகாலன் வரலாற்றை எழுதிய **உலகநாதப் பிள்ளை,** தமிழ் வரலாறு எழுதிய **சீனிவாசம் பிள்ளை**,
கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவரான
**தியாகராஜ சுவாமிகள்,**
மொழிப்போர் தியாகி **பட்டுக்கோட்டை அழகிரி,** கவிஞர் **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்,**
நடிகர் திலகம் **சிவாஜிகணேசன்**
போன்ற எண்ணற்ற சரித்திரவான்களையும், சாதனையாளர்களையும் பெற்ற பூமி இது.

மாண்புமிகு பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர், பாரத ரத்னா **டாக்டர் எம்.ஜி.ஆர்.** அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாட்டில் உள்ள அத்தனை மாவட்டங்களிலும் கொண்டாடுவது என்பது ஒவ்வொரு விதத்தில் சிறப்பானவை என்றாலும்,
இந்த தஞ்சை மாவட்டத்தில் நம் மகத்தான தலைவருக்கு விழா எடுப்பது மிகமிக சிறப்பானதாகவும், மிகவும் பொருத்தமானதாகவும் நாம் கருதுகிறோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் **எம்.ஜி.ஆர்.** அவர்கள் இலங்கை கண்டியில் அன்னை **சத்தியாவுக்கும் திரு.கோபால மேனனுக்கும்** ஐந்தாவது மகனாகப் பிறந்தார்கள். தந்தை கோபால மேனன் திடீரென்று இறக்கவே, அந்தக் குடும்பம் திக்குத்தெரியாமல் கண்டியில் தவித்தது. வறுமையில் வாடியபோது கண்டியிலேயே இரண்டு பெண் குழந்தைகளையும், ஒரு ஆண் மகனையும் இழந்து, எஞ்சியிருந்த திரு.எம்.ஜி.சக்ரபாணியுடனும், அப்போது ராமசந்திரராக இருந்த நமது தலைவருடனும் உயிர்பிழைக்க உலகில் எந்தப் பகுதிக்குச் செல்வது என்று அன்னை சத்தியா யோசித்தபோது,
அந்தத் தாயாரின் **நினைவுக்கு வந்த ஊர்தான்**
**இந்த தஞ்சை மாவட்டம் கும்பகோணமாகும்.**

உலகில் எத்தனையோ ஊர்கள் இருக்கும்போது, தமிழ்நாட்டில் உள்ள இந்தக் கும்பகோணத்தை தேர்வு செய்தார். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கும்பகோணத்திற்கு வந்தது
நாம் செய்த புண்ணியம் அல்லவா ?
எதிர்கால தமிழ்நாட்டை ஆளப்போகிற தவப்புதல்வனை கும்பகோணம் இருகரம் கூப்பி வரவேற்று சீராட்டியது என்பது **தஞ்சைக்கு கிடைத்த பெருமை அல்லவா ?**

கும்பகோணம் ஆணையடி பள்ளியில்
3ஆம் வகுப்பு வரை படித்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தன் குடும்பத்தைக் காப்பாற்ற நாடக கம்பெனியில்
சேர வேண்டிய நிலை ஏற்பட்டது.

**‘கொடிது கொடிது இளமையில் வறுமை’**
என்பார் அவ்வையார்.

**இளமையில் வறுமையால் வாடிய மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கையின் தொடக்கப்புள்ளி தஞ்சைமண் என்பதால்தான் இந்த மண்ணில் அந்த மகத்தான தலைவனுக்கு விழா எடுப்பது என்பது தஞ்சாவூர் மக்களின் தலைமகனுக்கு எடுக்கும் மாபெரும் விழாவாக, உணர்ச்சிப்பூர்வமான விழாவாக நான் கருதுகிறேன்.**

இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிக் குழந்தைகள் பசியாற சத்துணவு சாப்பிடுகின்றார்கள் என்றால் அதற்கு
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் இளமையில் பட்ட வறுமையின் எதிரொலிதான் காரணம்.

இனி தமிழ்நாட்டில் எந்தக் குழந்தையும் பசியால் வாடக்கூடாது என்கிற வைராக்கியத்தை அவருக்கு உண்டாக்கியது, இந்த கும்பகோணம் வாழ்க்கை அனுபவம் தான். எனவே, தஞ்சை மக்கள் தங்கள் மாவட்டத்து சாதனைகளில் சத்துணவையும் சேர்த்துக் கொள்ளலாம்.

தாய் சத்தியாவுக்கு தன் குடும்பம் வசிக்க தகுந்த இடம் தஞ்சை மாவட்டம் என்று எப்படி தீர்மானித்தாரோ, அப்படித்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றதும், தமிழன்னைக்கு மணிமகுடம் சூட்டி அழகு பார்க்க தமிழுக்கென்று தனியாக ஒரு பல்கலைக்கழகம் நிறுவ விரும்பியபோது,

அவருடைய எண்ணத்தில் முதலில் வந்து நின்றது இந்த தஞ்சாவூர் மாவட்டம்தான்.

தஞ்சைக்குப் பெருமை சேர்த்த
**பிரகதீஸ்வரர் கோயிலைக் க**ட்டிய
**முடியரசு மன்னர்    ராஜ ராஜசோழனைப்** போல்,

972 ஏக்கர் பரப்பளவில் தஞ்சை
**தமிழ்ப் பல்கலைக்கழகத்தை** நிறுவி
தஞ்சைக்கு மேலும் புகழைச் சேர்த்தவர்
**குடியரசு மன்னர்** மாண்புமிகு
புரட்சித் தலைவர் **எம்.ஜி.ஆர். அவர்கள்.**
இந்த இரண்டு பேருமே இந்திய வரலாற்றில்
மன்னாதி மன்னர்களாக இன்றைக்கும் போற்றப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டின் மீதும் தமிழ் மொழியின் மீதும்
அளவு கடந்த பற்று கொண்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்கள் என்பதற்கு ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கேரளாவில் மலையாள மக்கள் மட்டுமே கூடியிருந்த ஒரு விழாவில்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கலந்து கொண்டு
மலையாளத்தில் பேசாமல், தமிழில் பேசினார்கள்.  அங்கிருந்தவர்கள்
மலையாளத்தில் பேச வற்புறுத்தினார்கள்.
அதை நமது தலைவர் செவிமடுக்காமல்,

**“என் குடும்பம் கேரளத்தை சார்ந்தது என்றாலும், என்னையும்,  என் குடும்பத்தையும் வாழவைத்தது தமிழக மக்கள்தான்.**  என்னுடைய இன்றைய வளர்ச்சி, புகழ், செல்வாக்கு, அத்தனைக்கும் காரணம் தமிழ்நாடு, அப்படியிருக்க நான் எப்படி மலையாளத்தில் பேசுவது **?**” என்று  நிகழ்ச்சியின் கடைசி வரை தமிழிலேயே பேசி விட்டு வந்தார்கள்.

**“பிறநாட்டு சாத்திரங்கள் தமிழ்மொழியில்**
**மொழி பெயர்த்தல் வேண்டும்**”
என்ற  மகாகவி பாரதியாரின் கனவை
நனவாக்க பிற நாட்டு நூல்களை
தமிழில் மொழி பெயர்க்கச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் எழுத்து சீர்திருத்தத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தன் படங்களில் தாய் நாட்டின் பற்றை வெளிப்படுத்துவதைப் போல தாய்மொழியின் பெருமைகளை வசனங்கள் மூலமாகவும்,
பாடல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தினார்கள்.

**'கலங்கரை விளக்கம்'** என்ற படத்தில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் **'சங்கே முழங்கு'** என்ற பாடலைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

> **'தாய் மேல் ஆணை தமிழ் மேல் ஆணை**
> **குருடர்கள் கண்ணைத் திறந்து வைப்பேன்'**

என்று **'நான் ஆணையிட்டால்'** படத்தில் பாடினார்கள்.

> **'செந்தமிழா எழுந்து வாராயோ – உன்**
> **சிங்காரத் தாய்மொழியினைப் பாராயோ'**

என்று **மதுரை வீரனில்** பாடுவார்கள்.

**'விழி போல எண்ணி – நம்**
**மொழி காக்க வேண்டும்'** என்று **நம் நாடு**
என்ற படத்தின் மூலம் நமது குழந்தைகளுக்கு மொழியின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

தனது கடைசிப் படமான **மதுரையை மீட்ட**
**சுந்தர பாண்டியன்** படத்தில்
**"எங்கள் சந்தனத் தமிழுக்கு வேறேது ஈடு"** என்று
பாடி தமிழின் பெருமையை உலகம் அறியச் செய்து தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவராகத் திகழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

இப்படிப்பட்ட காட்சிகள் மூலம் அவர் தமிழ் மொழி மீது தனக்கிருந்த மரியாதையை வெளிப்படுத்தினார்கள்.

தமிழ் நூல்கள் மீது இருந்த மோகம் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், அவர்களுக்கு திடீரென்று ஏற்பட்டதல்ல.
1945ஆம் ஆண்டு முதல் சிறுக சிறுக

தான் வாங்கி சேகரித்த புத்தகங்களை
எல்லாம் கொண்டு **‘காந்தி நூலகம்’** என்ற
நூலகத்தை தொடங்கினார்கள்.
தமிழ் நாட்டில் புதியதாக வெளிவரும்
நூல்களை வாங்கி நூலகத்தில்
வைத்து படித்தவர் நமது மாண்புமிகு
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

தங்களால்தான் தமிழ் வளர்ந்தது,
நாங்கள்தான் தமிழை வளர்த்தோம்
என்று மார்தட்டிக் கொண்டவர்கள்
தமிழை வளர்க்காமல், **பல விதத்திலும் அவர்கள் வளர்ந்து** கொண்டார்கள்
என்பது உண்மை.
**அவர்கள் தமிழை ஒரு ஆயுதமாக பயன்படுத்தினார்களே தவிர.. . ...**
**தமிழை உயிராகவும், உணர்வாகவும்**
**மதிக்கவில்லை.**

பேரறிஞர் அண்ணா அவர்கள்
தமிழுக்கு எப்படியெல்லாம் தொண்டு செய்ய நினைத்தார்களோ,
அதையெல்லாம் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் செய்த ஒரே தலைவர்
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் மாண்புமிகு
புரட்சித்தலைவி அம்மா அவர்களும் தமிழுக்கு செய்த மாபெரும்
திட்டங்களையெல்லாம்.. மூடி மறைக்க இவர்கள் எத்தனையோ சூழ்ச்சிகளை
செய்து பார்த்தார்கள்.

**ஜப்பான் நாட்டிலிருந்து 32** கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்ட கப்பலுக்கு
**‘தமிழ் அண்ணா’** என்று பெயரிட்டார்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தக் கப்பலுக்கு பெயர் சூட்டியபோது அத்தனை தமிழ்
நெஞ்சங்களும் மகிழ்ச்சி அடைந்தன.

தன்னுடைய ஆட்சியில் தான்,
**கவிஞர் புலமைப்பித்தன், கவியரசர் கண்ணதாசன், கவிஞர் முத்துலிங்கம்**
ஆகியோரை
**அரசவைக் கவிஞர்களாக** நியமித்து
தமிழுக்கு பெருமை சேர்த்தார்கள்.

**1982–**ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது வானொலிக்கு அளித்த ஒரு பேட்டியில்,
**‘எனது முதலமைச்சர் நாற்காலியின் மூன்று கால்கள் எவற்றால் ஆனவை என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான்காவது கால், பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களால் ஆனது**’ என்றார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆழ்மனதில் அசைக்கமுடியாத இடத்தைப் பெற்றிருந்த **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இந்த மாவட்டத்தின் மைந்தர் என்பதை**
நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு முதலமைச்சர்களிலேயே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஒரு தனிப்பெருமை உண்டு**. 26.4.1982 அன்று அனைத்து நதிகளையும் தேசிய மயமாக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு முதன்முதலாக கடிதம் எழுதியவர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.**

காவிரி பாசனத்தையே நம்பி இருக்கும்
காவிரி டெல்டா விவசாயிகளின் கஷ்டங்களுக்கு தீர்வுகாண தொலை நோக்கு சிந்தனையுடன் செயல்பட்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பது இதன் மூலம்
நமக்கு விளங்கும். விவசாயப் பிரச்சனைகளை தன் திரைப்படங்களின் வாயிலாக வெளிப்படுத்தியவர் நமது தலைவர் அவர்கள். **உழைப்பாளி, விவசாயி** பாத்திரங்களைத்தான் தன் படங்களில் அதிகமாக ஏற்று நடித்திருக்கிறார்கள்.

“**உரிமைக்குரல்**” என்ற திரைப்படத்தில் வரும்
ஒரு வசனத்தை இங்கே கூறினால் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இந்த விவசாய மண் மீது இருந்த பற்று வெளிப்படும்.

**“என் தாய் எனக்கு பாலூட்டி வளர்த்தாங்க.
இந்த நிலத்தாய் எனக்கு சோறூட்டி வளர்த்தது**”
என்று விளை நிலத்தின் மீது தான் வைத்திருந்த
உணர்வை வெளிப்படுத்தியிருப்பார்கள்.

அத்தகைய மாபெரும் தலைவரின் வழியில் வந்த
இந்த அரசு விவசாயிகளுக்கு பாதுகாப்பாக இருக்குமே தவிர, விவசாயிகள் விரும்பாத **எதையும்,**
**எந்தத் திட்டத்தையும்** தமிழ் நாட்டில் அனுமதிக்காது என்று உறுதியாகக் கூறிக் கொள்கின்றேன்.

**கடவுள் என்னும் முதலாளி,**
**கண்டெடுத்த தொழிலாளி – விவசாயி** என்று
பாடியவர், பாடலோடு நிறுத்திக் கொள்ளாமல் முதன்முதலாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் **330** கோடி ரூபாய் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தார்கள்.

அதுமட்டுமல்ல, மின்சாரம் தட்டுப்பாடாக இருந்த அந்த காலக்கட்டத்தில்கூட புதிதாக **3.30** இலட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கி,
பயிர் பாதுகாப்பு காப்பீட்டு முறையைக் கொண்டு வந்தார்கள்.

அதேபோல, தனது ஆட்சிக் காலத்தில்
மின் விளக்குகள் இல்லாத வீடுகளே இருக்கக் கூடாது என்று நினைத்து
வீட்டுக்கு ஒரு மின் விளக்கு
என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி
**அனைத்து குடிசை வீடுகளுக்கும் மின் விளக்கு** வசதியை ஏற்படுத்தினார்கள்.
இந்தத் திட்டத்தால் அதிக பலன் அடைந்தவர்கள்
விவசாயப் பெருங்குடி மக்கள்தான்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்களுக்குப் பிறகு கட்சியையும் ஆட்சியையும் திறம்பட நடத்திய
**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்கள்,
விவசாயப் பெருங்குடி மக்களின் நலனில் பன்மடங்கு அக்கறை காட்டி திட்டங்கள் போட்டதை யாரும் மறந்து விட முடியாது.

மாண்புமிகு புரட்சித் தலைவவி அம்மா அவர்கள்
ஆட்சிக்கு வந்ததும் **சென்னை கடற்கரையில்**
**84 மணி நேரம் உண்ணாவிரதம்** மேற்கொண்டு,
காவிரிப் பிரச்சனையில் உலகத்தின் கவனத்தை திருப்பினார்கள். பிறகுதான் இந்தப் பிரச்சனை தீர்வை நோக்கி நகர ஆரம்பித்தது. இதை யாராலும் மறுக்க முடியாது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து உச்ச நீதிமன்ற கதவுகளை தட்டியதன் விளைவாக 19.2.2013 அன்று காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. எனினும் காவிரி நீரில் நமக்குரிய பங்கை கர்நாடகம் விடுவிக்க மறுக்கிறது. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் செயல்படும் அம்மாவின் அரசு சட்டப் போராட்டம் நடத்தி வருகிறது. விரைவில் நமக்கு சாதகமான தீர்ப்பும், நிரந்தர தீர்வும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு பல திட்டங்களை கொண்டு வந்தார்கள். குறிப்பாக, 700 கோடி ரூபாய் செலவில் பல வசதிகளை ஏற்படுத்தி தஞ்சை நகரம் விரிவுபடுத்தப்பட்டது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான்.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில் ஒரத்தநாட்டில் கால்நடை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கலை அறிவியல் கல்லூரி கட்டடங்கள், பொறியியல் கல்லூரி கட்டடங்கள் போன்றவற்றைத் தொடங்கி தஞ்சையின் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள்.**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை பின்பற்றி அவர்கள் வழியில் நடக்கும் நாங்கள் கழகத்தின் ஆணிவேர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில், அவருடைய அன்பு குழந்தைகளான விவசாய பெருங்குடி மக்கள் அதிகமாக வாழும் இந்த தரணி போற்றும் தஞ்சைக்கு கைநிறைய திட்டங்களோடு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நூற்றாண்டு விழா எதற்கு? என்று கேட்கும் அரசியல் வித்தகர்களுக்கு இந்த திட்டங்களின் மூலம் பதில் கூறுகின்றோம்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் பேராவூரணி, அதிராமப்பட்டினம், பெருமகளூர் ஆகிய 3 பேரூராட்சிகள் மற்றும் 9 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆயிரத்து 153 ஊரகக் குடியிருப்புகளுக்கான, கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு **495 கோடியே 70 லட்சம்**

**ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட**
**கூட்டுக் குடிநீர் திட்டம்** உட்பட **632 கோடியே**
**4 லட்சம் ரூபாய் மதிப்பிலான 105 பணிகளை**
**இன்று நான் துவக்கி வைத்துள்ளேன்.**

பொதுப்பணித் துறை சார்பில் திருப்பனந்தாள் ஒன்றியம், மண்ணியாறு ஆறு நெடுகை
73/150 கி.மீ. முதல் – 121/500 கி.மீ. வரை
46 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
புனரமைத்து நவீனப்படுத்தும் பணி உட்பட
**186 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பிலான 43 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன்.**

**பல்வேறு துறைகளின் சார்பில் 40 ஆயிரத்து**
**101 பயனாளிகளுக்கு 271 கோடியே 90 லட்சம்**
**ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை**
**வழங்க உள்ளேன்.**
**தமிழ் நாடு முழுவதும் இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை**
**14 ஆயிரத்து 508 கோடியே**
**93 லட்சம் ரூபாய் மதிப்பிலான 35 ஆயிரத்து 886 பணிகளை துவக்கி வைக்கப்பட்டுள்ளது.**

சுமார் 4 ஆயிரத்து 884 கோடி மதிப்பீட்டில்
7130 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**ஆக மொத்தம் சுமார் 19 ஆயிரத்து 393 கோடி**
**ரூபாய் மதிப்பீட்டில் 43 ஆயிரம் பணிகள்**
**நடைபெற்று வருகின்றன.**

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மட்டும் தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்தஅரசு செய்த சாதனைகளில்
ஒரு சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன்.

ஏனென்று சொன்னால் எதிர்க்கட்சிகள் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி அமைந்த பிறகு மக்களுக்கு என்ன திட்டங்களை கொண்டு வந்தார்கள் என்று கேள்வி கேட்கிறார்கள். அவர்களது கேள்விக்கெல்லாம் பதில் கூறுகின்ற விதமாக சில திட்டங்களை கூற விரும்புகிறேன். இந்த தஞ்சை மாவட்டத்தில்

மட்டும் கடந்த ஆறு ஆண்டுகளில் அம்மாவினுடைய அரசால் கொண்டுவரப்பட்ட சில திட்டங்களை கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.

சிறு குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய சுமார் **233 கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.** இதன் மூலம் சுமார் **51 ஆயிரம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.**
மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக சுமார் 108 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 93 ஆயிரம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் சுமார் 11 ஆயிரத்து 780 பெண்களுக்கு 47 கோடி ரூபாய் நிதி உதவியும், 49 கிலோ தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 324 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 13 லட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

விலையில்லா மடிக்கணிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் மாணாக்கர்களுக்கு சுமார் 249 கோடி ரூபாய் மதிப்பிலான சுமார் 2 லட்சம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின் கீழ் 1202 ஏரிகள், குளங்கள், மற்றும் வாய்கால்களிலிருந்து சுமார் 41 லட்சம் கன மீட்டர் வண்டல் மண் மற்றும் சவடு மண் சுமார் 15 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

குடிமராமத்து பணிகள் திட்டத்தின் கீழ் சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 119 பணிகள் மேற்கொள்ளப்பட்டு பாசன வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது.

29 ஆயிரத்து 359 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 732 கோடியே 94 லட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்
விவசாயிகளுக்கு சுமார் 240 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பயிர் காப்பீட்டு தொகை வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் சுமார் 96 ஆயிரம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ்
233 கோடியே 65 லட்சம் மதிப்பீட்டில்
13 ஆயிரத்து 842 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ்
337 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பில்
25 ஆயிரத்து 30 வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு
மேம்பாட்டுத் திட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையின்
கீழ் சுமார் 2 லட்சத்து 22 ஆயிரம் பணிகள்
எடுக்கப்பட்டு, சுமார் 1,700 கோடி ரூபாய்
செலவிடப்பட்டுள்ளது.

உயர்கல்வித் துறையின் சார்பில் பாபநாசம் வட்டம் ரகுநாதபுரம் கிராமத்தில் அரசு பல்வகை தொழில் நுட்பக் கல்லூரி துவக்கப்பட்டுள்ளது.

பூதலூர் வட்டம் செங்கிபட்டி கிராமத்தில் புதிய அரசினர் பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் 68 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில்
14 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறை நபார்டு
கிராம சாலைகள் திட்டத்தின் கீழ்
52 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பில்
19 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் நகருக்கு 14.26 கி.மீ. நீளத்திற்கு புறவழிச் சாலை
94 கோடி ரூபாய் செலவில்

அமைக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம்
150 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில்
மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி தொகுதிக்குட்பட்ட மல்லிப்பட்டினம் மீனவ கிராமத்தில் கடற்கரை பேரிடர் குறைப்பு திட்டத்தின் கீழ் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
துறைமுக மேம்பாட்டுப் பணி துவங்கப்பட்டு
தற்போது நடைபெற்று வருகிறது.
இப்பணியினை எதிர்வரும் 2018 அக்டோபர் மாதத்திற்குள் முடிக்க நடிவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இரவு பகல் பாராமல் நாங்கள் தினம் தினம்
மக்கள் பணி ஆற்றி வருவதை பலர் விமர்சிப்பதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள்.

அமைச்சர்கள் முதல் தொண்டர்கள் வரை எந்த வேறுபாடுகளும் இல்லாமல் நாங்கள் உழைப்பது அவர்களுடைய கண்களை உறுத்துகிறது.
எங்கள் ஒற்றுமையை குலைப்பதற்கு எப்படியெல்லாமோ சதித் திட்டங்கள் போடுகிறார்கள்.

அம்மாவின் ஆட்சியை அழித்து விட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறார்கள்.

அது ஒரு காலமும் நடக்காது.
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடவுளாக இருந்து நம்மை வழிநடத்துகிறார்கள்.
ஆதலால் இனி நமக்கு அனைத்துமே
வெற்றிதான். எதிர்ப்பவர்கள் அனைவருக்கும்
தோல்வியே மிஞ்சும்.

ஒருவர் தாங்கள் ஏமாற்றுவது மற்றவர்களுக்குத் தெரியாது என்று நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் செய்யும் தவறுகளை எப்படியாவது வெளிவந்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

இதை கூறுகிறபோது எனக்கு ஒரு கதை
நினைவுக்கு வருகிறது.

ஒரு நகரத்தின் போக்குவரத்து நெரிசல் மிகுந்த
மையச் சாலையில், ஒரு இளைஞன்
முட்டைகள் அடங்கிய தட்டுடன் தனது
இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தான்.
திடீரென்று ஏற்பட்ட தடுமாற்றத்தில் அவன்
வண்டியுடன் கீழே சாய்ந்தான். வண்டி கீழே
விழுந்த வேகத்தில் அவன் கொண்டு
சென்ற அனைத்து முட்டைகளும் உடைந்து சிதறின.
அவன் செய்வதறியாது கவலையுடன்
அழத் தொடங்கினான்.

**“எனது சம்பளமே மிகவும் குறைவு,
அதையும் எனது முதலாளி உடைந்து போன
முட்டைகளுக்காக பிடித்துக் கொள்வாரே”**
என்று புலம்பினான்.

எப்போதும் போல, வேடிக்கைப் பார்க்கவென்றே
கூடும் கூட்டம் ஒன்று கூடியது. அவர்கள் அந்த
இளைஞனின் புலம்பலைக் கேட்டு, தங்களுக்குள்
பலவாறாக பேசிக் கொண்டனர். அதில் ஒருவன்,
**“பாவம் இந்த இளைஞன், வீட்டு வாடகைக்கு
என்ன செய்வானோ ?”** என்றும், மற்றொருவன்
**“அடுத்த மாத சாப்பாட்டிற்கு என்ன செய்வானோ ?”**
என்றும் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அப்பொழுது வயது முதிர்ந்த ஒருவர் அங்கு வந்தார்.
இருசக்கர வாகனம் கீழே விழுந்து கிடப்பதையும்,
அருகில் ஒரு இளைஞன் புலம்பிக்
கொண்டிருப்பதையும், அருகில் வேடிக்கை
பார்த்துக் கொண்டிருந்தவர்கள் தங்களுக்குள்
பலவாறாக பேசிக் கொண்டிருப்பதையும்
கண்டார். தனக்குள் ஒரு யோசனை செய்தார்.

உடனே கீழே விழுந்து கிடந்த அந்த இருசக்கர வாகனத்தை எடுத்து சாலையின் ஓரத்தில் நிறுத்தினார். பிறகு உடைந்த முட்டைகளை அப்புறப்படுத்தினார். பிறகு அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து,

**“பாவம் இந்த இளைஞன், கடும் வெயிலில் முட்டைகளை எடுத்து வரும்போது எந்தப் பாவியோ இவன் வந்த வண்டியை தள்ளி, அனைத்து முட்டைகளையும் உடையும்படி செய்துவிட்டான். இவனது முதலாளியோ மிகவும் பொல்லாதவன். உடைந்து போன முட்டைகளுக்காக இவனது சம்பளத்தை மட்டுமல்ல, இருசக்கர வாகனத்தையும் உடைத்து விட்டாயே என்று அதற்கும் தண்டனை கொடுப்பான். எனவே நாம் அனைவரும் நம்மால் முடிந்த பண உதவி செய்து இந்த இளைஞனிடம் கொடுத்தால், உடைந்த முட்டைகளுக்குப் பதில் நாம் வசூல் செய்து கொடுத்த பணத்தை முதலாளியுடம் கொடுத்து தண்டனையிலிருந்து தப்பித்து விடுவான்”** என்று கூறியபடி, அனைவரிடமும் பணம் வசூலிக்கத் தொடங்கினான்.
வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களும்,

**சே, இந்த பெரியவர் எவ்வளவு நல்லவர் – தானாக வந்து, இளைஞனின் கஷ்டத்தை நிவர்த்தி செய்கிறாரே** என்று பெரியவரிடம்

தங்களால் முடிந்த அளவு பணத்தை கொடுத்தனர். பெரியவர், தான் வசூல் செய்த பணத்தை அந்த இளைஞரிடம் அப்படியே கொடுத்து,
**“நீ இப்பணம் முழுவதையும் உன் முதலாளியிடம் கொடுத்து தண்டனையிலிருந்து தப்பிவிடு”** என்று சொல்லி அனைவருக்கும் நன்றி சொல்லி கிளம்பினார்.

வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கும்பலில் இருந்த ஒருவனுக்கு மட்டும் சிறிது சந்தேகம்

ஏற்பட்டது. அந்த இளைஞன் **ஓட்டி வந்த**
**இருசக்கர வாகனத்தில் எந்த வாகனமும்**
**மோதவில்லை, அவனே தடுமாறித்தானே விழுந்தான்.**
**அவன் விழுந்த போது அந்த முதியவரும் விபத்து நடந்த பகுதியிலேயே இல்லை. ஆனால்**
**விபத்தை நேரில் கண்டது போல் வேறு**
**வாகனம் மோதி அவன் விழுந்து விட்டானே**
**என்று எப்படி கூறினார்,**
என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது.
எனவே கீழே விழுந்த இளைஞன்
**எங்கே செல்கிறான், அவன் என்ன செய்கிறான்**
**என்பதை கண்டறிய வேண்டும்** என்று
தனக்குள் பேசிக்கொண்டே, கீழே விழுந்த
**இளைஞனை பின்தொடர்ந்தான்.**

கீழே விழுந்த இளைஞன் இரண்டு சாலைகள் தள்ளி,
ஒரு முட்டைக் கடைக்குச் சென்றான். அங்கிருந்த
பெரியவரிடம் வேடிக்கைப் பார்த்தவர்கள்
தந்த பணத்தை அப்படியே கொடுத்தான்.

பின் தொடர்ந்து சென்றவன் அருகில்
சென்று பார்த்தபொழுது தான் தெரிந்தது,

**அந்த கடை முதலாளி வேறு யாரும் அல்ல –**
**வேடிக்கை பார்த்தவர்களிடம் பணம் வசூல்**
**செய்து கொடுத்த பெரியவர்தான் என்று.**

கடையினுள் சென்று அவர்கள் என்ன
பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறிய எண்ணி,
முட்டை வாங்குபவன் போல் அந்த கடைக்குள்
சென்றான்.

அப்போது அந்த பெரியவன், இளைஞனிடம்,

“**மகனே, பார்த்தாயா, கெட்டுப்போன**
**முட்டைகளை நான் சொன்னபடி நீ**
**எடுத்துச் சென்று கீழே விழுந்தாய்.**

**நானும் ஏதேச்சையாக அங்கே வந்தது போல் வந்து, யாரோ ஒரு ஏழை வேலைக்காரன், பாவம் கீழே விழுந்து புலம்பிக் கொண்டிருக்கின்றான் என்று கதையை மாற்றி, நமக்கு லாபகரமாக மாற்றிவிட்டேன். வேடிக்கை பார்த்தவர்களிடமே பணத்தை வசூல் செய்து 1,500 ரூபாய் வசூலித்து விட்டேனே”** என்று கூறினார்.

முட்டை வாங்குவது போல் அவர்கள் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த நமது ஆள், **தந்தை மற்றும் மகனின்** சாமர்த்தியத்தை பார்த்து மயங்கி விழுந்தான்.

இந்த கதையில் யார் மகன், யார் தந்தை என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில், தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு திட்டப்பணிகள் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். நீர்வள, நிலவள திட்டத்தின் மூலமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இந்த ஆண்டு சுமார் 103 கோடி ரூபாய் செலவில் 26 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் எடுத்துக் கொள்வதன் மூலமாக, நீர்வரத்து கால்வாய்கள் இன்றைக்கு சரி செய்யப்படுகின்றன. ஏரி, குள மதில்கள் சரி செய்யப்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலமாக நீர் ஆதாரத்தை பெருக்கக்கூடிய திட்டம் இன்றைக்கு இந்த மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலமாக, நீர் ஆதாரம் வெகுவாக சேமிக்கப்படுகிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். அதேபோல, கல்லணை கால்வாய் புதுப்பித்தல் மற்றும் விரிவுபடுத்தல் அந்தத் திட்டம் 2298 கோடி ரூபாய் செலவில் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதனால் பாசனப் பரப்பு, தஞ்சை மாவட்டம் மற்றும் அருகாமையில் உள்ள புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் 2 லட்சத்து 27 ஆயிரம் ஏக்கர் பயனடையும் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏன் இதை சொல்கிறேனென்று சொன்னல், இன்றைக்கு எதிர்க்கட்சியனரெல்லாம் விவசாயிகளுக்கு என்ன சாதனை இந்த ஆட்சியிலே கிடைத்தது என்று ஒரு கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல, அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்கு எண்ணற்ற திட்டங்களை செய்து கொண்டிருக்கின்றோம். எனக்கு முன்னாலே

உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு துரைக்கண்ணு அவர்கள் வண்டல் மண்ணைப் பற்றி குறிப்பிட்டார்கள். விவசாயிகள் என்று சொன்னால் நீர் ஆதாரம் வேண்டும். உடலுக்கு உயிர் எப்படி முக்கியமோ அதைப்போல விவசாயிகளுக்கு உயிராக இருப்பது நீர். அந்த நீரை அதிகப்படுத்த வேண்டும். அதற்காக கிட்டத்தட்ட 40 ஆண்டுகாலமாக தூர்வாரப்படாமல் இருந்த ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை, விவசாயிகள் துணைகொண்டே அந்த வண்டல்மண்ணை அவர்களுடைய நிலத்திற்கு எருவாக கொண்டு பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அறிவிப்பை அறிவித்து, தமிழகத்தில் மட்டும் 1519 ஏரிகள், 100 கோடி ரூபாய் திட்டத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் வாயிலாக குளங்கள், ஏரிகள் ஆகியவை ஆழப்படுகின்றன. விவசாயிகளுக்குத் தேவையான வண்டல்மண் இயற்கை உரமாக கிடைக்கின்றது. இதனால் பருவமழையில் பெய்கின்ற நீர் அதிக அளவிலே சேமித்து வைக்கப்படுகின்றது. ஆகவே, அற்புதமான திட்டத்தை அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்கு தந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகிறேன். அதேபோல, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகை. அதேபோல பயிர் இழப்பு, இன்றைக்கு வறட்சி காலங்களிலே விவசாயிகளால் பயிரிடப்பட்ட அந்த பயிர்கள் காய்ந்து அவர்களுடைய வருமானம் குறைந்கின்றபொழுது, காப்பீடு திட்டத்தின் மூலமாக அவர்களுக்கு நம்முடைய அரசு உதவித் தொகையை பெற்றுத் தந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்காக பல்வேறு திட்டங்களை அளித்துக் கொண்டிருக்கின்றது.

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 14 ஆண்டுகாலம் ஆட்சி அதிகாரத்திலே இருந்தது. இந்த தஞ்சைக்கு என்று எதை செய்தார்கள் ? அவர்களது ஆட்சியிலே நினைத்திருந்தால், நிச்சயம் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டிருக்கலாம், அந்த வாய்ப்பு அவர்களுக்கு இருந்தது. ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை, அவர்கள் காலத்திலே அதையெல்லாம் செய்யவில்லை. தனக்கு என்ன பதவி கிடைக்கிறது, என்ன அதிகாரம் கிடைக்கிறது என்ற நிலையிலேதான் இருந்தார்களே தவிர நாட்டுமக்களை சிந்திக்கவில்லை. நம்முடைய ஜீவநதியாக இருப்பது காவிரி நதி. அப்படிப்பட்ட காவிரி நதிக்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்ட போராட்டம் நடத்தி, சட்டத்தின் வாயிலாக நமக்கு உரிமையை பெற்றுத் தந்தார்கள். அதற்காக தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடிமக்கள் அவருக்கு பாராட்டு விழா எடுத்தார்கள். பாராட்டு விழாவிலே அம்மா பேசுகின்றபொழுது, நானும் விவசாயி என்று குறிப்பிட்டார், அந்த பெருமை

தஞ்சை மாவட்டத்திற்கு கிடைத்திருக்கின்றது. நானும் ஒரு விவசாயி, மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அவர்களும் ஒரு விவசாயி, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு வைத்திலிங்கம் அவர்களும் ஒரு விவசாயி, உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு துரைக்கண்ணு அவர்களும் ஒரு விவசாயி, அது மட்டுமல்ல, புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுது, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்வருக்கு வேளாண்மைத்துறை அமைச்சராக திரு வைத்திலிங்கம் அவர்களை நியமித்தார், அதற்குப் பிறகு திரு துரைக்கண்ணு அவர்களையும் வேளாண்மைத் துறை அமைச்சராக நியமித்தார். இன்றைக்கு அரசாங்கத்தின் மூலமாக நன்மைகள் இந்த விவசாயப் பெருங்குடிமக்களுக்கு கிடைக்கவேண்டும் என்பதற்காக அந்தத் துறையை இந்த இருவருக்கும் வழங்கி ஒரு வளமான மாவட்டமாக உருவாக்குவதற்கு அம்மா நடவடிக்கை எடுத்தார் என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இங்கே திரு வைத்திலிங்கம் அவர்கள் வேளாண்மைத்துறை அமைச்சராக இருந்தார். புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சிக்காலத்திலே இன்றைக்கு இந்தியாவிலேயே உணவுதானிய உற்பத்தியில் தமிழகம் ஐந்தாண்டுகளில், நான்காண்டுகளில் முதல் பரிசு பெற்ற மாநிலம் தமிழ்நாடு. அதற்காக அம்மாவினுடைய அரசுக்கு மத்திய அரசு க்ரிஷ் கர்மான் என்ற விருதை அளித்து, தமிழ்நாடு உணவுதானிய உற்பத்தியில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கியது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுக்கு அளித்த பல்வேறு நலத்திட்ட உதவிகளின் காரணமாக விவசாயிகளுக்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தி, தமிழகத்திலே வறட்சி நிலவினாலும் கூட, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவு இன்றைக்கு இந்தியாவிலேயே நான்கு ஆண்டுகள் உணவுதானிய உற்பத்தியிலேயே அதிக உற்பத்தி செய்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை பெற்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு உயர்கல்வித்துறையில் ஐந்தாண்டுகளில், அம்மாவினுடைய அரசு 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்தார்கள். ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், கல்வி அறிவு தேவை. அப்படிப்பட்ட கல்வி அறிவை ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, குடிசையிலே வாழ்கின்ற தொழிலாளியினுடைய மகனுக்குக் கூட படிக்கவேண்டும் என்ற எண்ணத்திலே 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கித் தந்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அதே வழியில் வந்த அம்மாவின் அரசு, 11 அரசு மற்றும் கலைக்கல்லூரியை கொடுத்து 76 அரசு கலைக்கல்லூரிகளை தமிழகத்திலே நிறுவி ஏழை, எளிய,

ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மக்கள் உயர்கல்வி படிக்கக்கூடிய நிலையை உருவாக்கித் தந்த அரசு அம்மாவினுடைய அரசு. ஆகவே தான், 2016ல் அம்மாவினுடைய ஆட்சி அமைகின்றபொழுது, இன்றைக்கு நூற்றுக்கு 21 சதவீதம் உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை, மாண்புமிகு அம்மா எடுத்த புரட்சியின் காரணமாக 2016 ஆம் ஆண்டில் கல்வியின் தரம் உயர்ந்தது, அதனால் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 44.32 சதவீதமாக உயர்ந்து இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்துள்ள மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை அம்மாவின் அரசு நிலைநாட்டியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு கிராமத்திலிருந்து நகரம் வரை சாதாரண ஏழை, எளிய மக்கள் கல்வி அறிவு பெறவேண்டும் என்பதற்காக, 227 புதிய தொடக்கப்பள்ளிகள், 116 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 829 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. எந்த ஆட்சியில் இவ்வளவு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் ? ஒரு சாதாரண ஏழை குடும்பத்திலே பிறந்த மாணவ, மாணவி கூட அந்தப் பகுதியிலே பள்ளி இருந்தால் கல்வி கற்க முடியும். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு திட்டத்தை தீட்டி ஏழை, எளிய மக்கள் குறைந்த கட்டணத்திலே அந்தப் பகுதியிலே கல்வி கற்க வேண்டும் என்ற அடிப்படையிலே இவ்வளவு பள்ளிகளை தரம் உயர்த்தி, புதிய பள்ளிகளை தொடங்கி சரித்திர சாதனை படைத்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக தொடக்க நிலை கல்வியில் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை 99.85 விழுக்காடாகவும், நடுநிலை கல்வியில் சேர்ந்த மாணவர்களுடைய சேர்க்கை 99.20 விழுக்காடாக உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மருத்துவத் துறையிலே மிகப்பெரிய சாதனையை நாம் படைத்துக் கொண்டிருக்கின்றோம். இந்தியாவிலேயே உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தமிழ்நாடு தான் முதன்மையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது என்று நேற்று மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் மத்திய அமைச்சரிடமிருந்து விருதை பெற்றிருக்கின்றார். எல்லா வகையிலும் சுகாதாரத் துறை தமிழகத்திலே சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஆறாண்டுகளிலே மருத்துவம் உட்பட மருத்துவம் சாரா தொழில்கள் 1 லட்சத்து 20 ஆயிரத்து 506 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சென்னை, இந்தியாவின் மருத்துவ நகரமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. தமிழகத்திலே அதிகமாக மருத்துவ சாதனை செய்ததன் விளைவாக,

இன்றைக்கு நோயற்ற மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகம் தொழில் வளர்ச்சி கண்ட மாநிலமாக கண்ட மாநிலமாக திகழ்வதற்காக அம்மா அவர்கள் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையிலே நடத்தி, கிட்டத்தட்ட 2 லட்சத்து 42 ஆயிரத்து 170 கோடி ரூபாய் தொழில் முதலீட்டாளர்களை ஈர்த்திருக்கின்றார்கள், 99 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையெழுத்திடப்பட்டிருக்கின்றது. இவற்றில் 62,732 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 61 திட்டங்கள் பல்வேறு கட்டத்தில் செயலாக்கத்தில் உள்ளன. இதுவரை 76 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் நேரடி மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். 2018 ஆம் ஆண்டில் இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாட்டினை நடத்திட அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, தொழிற்சாலை மிகுந்த நகரமாக உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலமாக படித்து பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும், பொருளாதாரம் மேம்பாடு அடையும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இன்றையதினம் மணல் பிரச்சினை, இன்றைக்கு நான் வருகின்றபொழுது, தொலைக்காட்சியில், திரு.துரைமுருகன் பேட்டி பார்த்தேன், இந்த ஆட்சி 24 மணிநேரமும் மணற்கொள்ளையில் ஈடுபடுவதாகச் சொன்னார், உண்மையில் அப்படி எதுவும் நடைபெறவில்லை. இவர்களுடைய ஆட்சி காலத்தில் நடந்தது. இவர் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது நடைபெற்றது வேண்டுமானால் உண்மை. ஆனால், அம்மாவினுடைய அரசில் அப்படி நடைபெறவில்லை. இன்றைக்கு மணல் குறைந்த விலையில் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் அரசே ஏற்று நடத்துவதாக அறிவித்து, அதற்கான ஏற்பாடுகளும் செய்வதாக அறிவித்து, நடத்திக் கொண்டிருந்தோம். ஒரு சிலர் நீதிமன்றத்தை நாடியதின் விளைவாக அது தடைபட்டது. அதனால் விலை உயர்ந்தது. இன்றைக்குக்கூட மதுரை உயர்நீதிமன்றக் கிளை ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், ஏழை மக்களுக்கும், பொதுமக்களுக்கும், குறைந்த விலையில் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் மணலை விற்பனையை அரசே ஏற்று நடத்தியது. அதுவும், மூத்த அமைச்சர்கள், அதிகாரிகளுடன் ஆலோசித்து, இதை எப்படி நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு சில திட்டங்களின் மூலமாக நடைமுறைப்படுத்தினோம். ஆன்—லைன் மூலமாக மணல் விற்பனையைத் தொடங்கினோம். எந்த முறைகேடுக்கும் இடமளிக்காமல் ஆன்—லைன் மூலம்

மணல் விற்பனையை செய்தோம். மணல் அள்ளுகின்ற குவாரியிலே சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது. யாரும் தவறு செய்ய முடியாது. மணல் அள்ளுகின்ற லாரி, சிசிடிவி கேமரா மூலம் பதிவு செய்யப்படும். அதேபோல ஆன்–லைன் புக்கிங் செய்தால்தான் மணல் அள்ளமுடியும். ஆன்–லைனிலேயே பணம் கட்டப்படும். இப்படிப்பட்ட முறைகளையெல்லாம் கையாண்டோம். இப்படிப்பட்ட முறைகளையெல்லாம் கையாளும்போது, தவறே ஏற்படாமல், உண்மையாக மணல் விற்பனையை அரசே ஏற்று நடத்தும் என்று அறிவித்து அதன்படி நாங்கள் செய்து வந்தோம். ஆனால், நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி செயல்படுகின்ற காரணத்தினால்தான் இன்றையதினம் மணல் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். அதில் எந்த தவறும் ஏற்படவில்லை, ஏற்பட நாங்கள் ஒருபோதும் துணைபோகவில்லை என்பதை திட்டவட்டமாக கூறிக்கொள்கின்றேன்.

அதேபோல, இன்றையதினம் மு.க.ஸ்டாலின் எப்பொழுது பார்த்தாலும் நம்முடைய ஆட்சியை குறை சொல்வது அல்லது கட்சியை குறை சொல்வது இதைத்தான் வாடிக்கையாகக் கொண்டிருக்கின்றார். அவர் எவ்வளவு குறை சொன்னாலும் அதில் எள் முனையும் உண்மையல்ல. அது நாட்டு மக்களுக்கும் தெரியும், கழகத்தைச் சேர்ந்த தொண்டர்களுக்கும் தெரியும். எதையெதையோ கதை கட்டிவிடுகின்றார், எவ்வளவோ பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுகின்றார். அத்தனைக்கும் நாம் முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டிருக்கின்றோம். ஏனென்று சொன்னால், உழைப்பாளிகள் நிறைந்த இயக்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம். நீங்கள் எவ்வளவு பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட்டாலும் மக்கள் நம்பப்போவதில்லை. உழைப்பாளிகள் நிறைந்த தொண்டர்கள், பொதுமக்கள் ஆதரவு இருக்கின்றவரை இந்த இயக்கத்திற்கு எந்தவித துன்பமும் நேரிடாது. அதுமட்டுமல்ல, இருபெரும் தலைவர்களும் எங்கள் பக்கம் தெய்வமாக இருந்து இந்த ஆட்சியையும், கட்சியையும் காத்து வருகின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றையதினம் உங்களுடைய மாவட்ட அமைச்சர் மரியாதைக்குரிய திரு.இரா.துரைக்கண்ணு அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்களும், அவரோடு சேர்ந்து, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், இந்த தஞ்சை மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோரிக்கை மனு கொடுத்தார்கள். அந்த கோரிக்கை மனுவின் அடிப்படையில், ஒருசிலவற்றை

இங்கே அறிவிக்க விரும்புகின்றேன். (துஞ்சாவூர் மாவட்டத்திற்கான அறிவிப்புகள்)

ஆகவே, இவ்வளவு பணிகளையும் அம்மாவினுடைய அரசு இந்த மாவட்டத்திலுள்ள செய்ய திட்டமிட்டுள்ளது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு மட்டுமல்ல, இங்கே உங்களுடைய மாவட்ட அமைச்சர் மரியாதைக்குரிய திரு.இரா.துரைக்கண்ணு அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்களும் சொன்னார்கள். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா எடுக்கின்றபொழுது மழை கொட்டோ எனக் கொட்டுகின்றது. அவ்வளவு மழை பொழிந்தாலும், இங்கேயிருக்கின்ற தஞ்சை மாவட்ட மக்கள் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கோட்டையாக விளங்குகின்ற மாவட்டம் தஞ்சாவூர் மாவட்டம். வானமே இடிந்து விழுந்தாலும், விடாமல் மழை பொழிந்தாலும், மழையிலே நனைந்து இங்கே அமர்ந்து பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கண்டு, களித்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றியை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த விழாவினை சீரும், சிறப்போடும் நடத்துவதற்கு உறுதுணையாக விளங்கிய மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அன்பைப் பெற்றவரும், முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மரியாதைக்குரிய கழக அமைப்புச் செயலாளர் திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்களுக்கும், அவரோடு துணை நின்று, மாண்புமிகு இதயதெய்வவம புரட்சித்தலைவி அம்மாவினுடைய எண்ணங்களை பிரதிபலித்துக் கொண்டு, அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே நல்ல பல கருத்துக்களை பாடலாகப் பாடி, அம்மா அவர்களின் மனதிலே இடம்பெற்று வேளாண்மைத்துறை அமைச்சராக இடம்பெற்றுள்ள திரு.இரா.துரைக்கண்ணு அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும், கழகத்தின் ஒட்டுமொத்த பணியாளர்களும் இணைந்து பணியாற்றி, தமிழகத்திலேயே எங்கும் இல்லாத அளவிற்கு மழை கொட்டினாலும், அதையும் பொருட்படுத்தாமல் மக்கள் வெள்ளம் அலைமோதி, இங்கே நூற்றாண்டு விழா நிகழ்ச்சி, சீரோடும், சிறப்போடும் நடைபெறுவதற்கு உறுதுணையாக விளங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அரசு

அலுவர்களுக்கும் மற்றுமுள்ள அனைவருக்கும் இந்த நேரத்திலே நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவிற்கு வந்திருக்கின்ற மகளிர், குழந்தைகள், தொண்டர்கள், பொது மக்கள் ஆகிய அனைவரும் அனைவரும் வாகனங்களில் போகிறபோதும், நடந்து போகிற போதும் கவனமாக வீடுபோய் சேரவேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி!
வணக்கம்!

**<u>தஞ்சாவூர் மாவட்டத்திற்கான சிறப்பு அறிவிப்புகளை அறிவித்தார்கள்</u>**

**நெல் இரகத்திற்கு பெயரிடுதல்**

1) **தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால்** இந்த ஆண்டு புதியதாக வெளியிடப்பட்ட **நெல் இரகத்திற்கு "எம்.ஜி.ஆர் 100" என சற்று முன்னர் பெயரிட்டு, அந்த ரக நெல்லை பயனாளிக்கும் வழங்கினேன்.**

**பள்ளியை தரம் உயர்த்துதல்**

2) கும்பகோணம் நகரத்தில் புரட்சித் தலைவர் **டாக்டர் எம்.ஜி.ஆர். படித்த யானை அடி நகராட்சி தொடக்கப் பள்ளியானது நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படும்.** மேலும் அப்பள்ளிக்கு **பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுப் பள்ளி என்றும் பெயர் சூட்டப்படும்.** அப்பள்ளியில் சத்துணவு வழங்கப்படவில்லை என்பதை அறிந்தவுடன், மாண்புமிகு அம்மாவின் அரசு, **சத்துணவு திட்டத்தின் பிதாமகன் புரட்சித்தலைவர் அவர்கள் படித்த பள்ளியில் உடனடியாக சத்துணவு மையம் தொடங்க ஆணையிட்டது.** தற்பொழுது அந்த

பள்ளியில் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. **இங்கேயே சத்துணவு சமைக்க தனி சமையலறை கட்டப்படும்.**

**புதிய கால்நடை கிளை நிலையம்**

3) திருபணந்தாள் ஒன்றியத்தில் **திட்டச்சேரி,** திருவோணம் ஒன்றியத்தில் **கிழமங்கலம் ஆகிய கிராமங்களில் இரண்டு புதிய கால்நடை கிளை நிலையம்** அமைக்கப்படும்.

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்**

4) **கும்பகோணம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் விவசாயிகளின் நலன் கருதி** 2.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கும், பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மற்றும் வல்லம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகங்களில் தலா 1.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுமாக **ஐந்து கிடங்குகள் நபார்டு வங்கி உதவியுடன் ஏற்படுத்தப்படும்.**

5) பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் **மின்னணு ஏலமுறை மென்பொருள் வசதி, மின்னணு ஏலக்கொட்டகை, பொதுவான வகைப்படுத்தும் கருவிகள் மற்றும் எடைமேடை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.** (1.02 கோடி ரூபாய்)

**மின் வசதிகள்**

6) தஞ்சாவூர் மாவட்டம், பந்தநல்லூரில் **மின் விநியோகத்தை மேம்படுத்தும் பொருட்டு, பந்தநல்லூரில் புதிய துணை மின் நிலையம் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

7) **மின் நகரில் புதிய 110/11 கி.வோ. துணை மின்நிலையம்** 5.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8) **திருமலை சமுத்திரத்தில் புதிய 110/33–11 கி.வோ. துணை மின்நிலையம்** 10.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

9) **110/11 கி.வோ. பூண்டி துணை மின் நிலையம்,** 2.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **110/33–11 கி.வோ. துணை மின் நிலையமாக தரம் உயர்த்தப்படும்.**

10) **110/11 கி.வோ. ஊரணிபுரம் துணை மின் நிலையம்** 2.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **110/33–11 கி.வோ. துணை மின் நிலையமாக தரம் உயர்த்தப்படும்.**

11) **தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தில் புதியதாக கணினி முறையில் மின்தடை பழுது நீக்கும் மையம் (Fuse Off Call centre) 44.95** இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

12) **பட்டுக்கோட்டைக்குட்பட்ட பேராவூரணி உப கோட்ட அலுவலகம்** 35.00 இலட்சம் ரூபாய் செலவில் **பேராவூரணி கோட்ட அலுவலகமாக மாற்றி அமைக்கப்படும்.**

**ரெகுலேட்டர் அமைத்தல்**

13) கும்பகோணம் வட்டம், **கும்பகோணம் நகரத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே மைல் 57/7–ல் நடைபாலத்துடன் கூடிய ரெகுலேட்டர் அமைப்பதற்கு** ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**தளமட்டச் சுவர்கள் அமைத்தல்**

14) கும்பகோணம் வட்டம், சுந்தரப் பெருமாள் கோயில் கிராமத்தில் **அரசலாற்றின் குறுக்கே மைல் 52/3–4ல் தளமட்ட சுவர்** அமைக்கப்படும். (5.30 கோடி ரூபாய்)

15) திருவிடைமருதூர் வட்டம், பவுண்டரிகாபுரம் கிராமத்தில் மாங்குடி வாய்க்காலுக்கு நீர் வழங்கும் பொருட்டு **கீர்த்திமன்னார் ஆற்றின் குறுக்கே மைல் 63/1–2ல் தளமட்ட சுவர்** அமைக்கப்படும். (4 கோடி ரூபாய்)

**தடுப்பணைகள் அமைத்தல்**

16) ஒரத்தநாடு வட்டம், தாலயமங்களம் கிராமத்தில் **தாலயமங்களம் ஏரி வடிகாலின் குறுக்கே எல்.எஸ்.1.60 கி.மீ–ல் தடுப்பணை** அமைக்கப்படும்.
(50 லட்சம் ரூபாய்)

17) ஒரத்தநாடு வட்டம், வண்ணான்கொல்லைபட்டி கிராமத்தில் **பனங்குளம் உபரி நீர்போக்கின் குறுக்கே எல்.எஸ்.2.00 கி.மீ–ல் தடுப்பணை** அமைக்கப்படும். (70 லட்சம் ரூபாய்)

18) ஒரத்தநாடு வட்டம், தோப்பு விடுதி கிராமத்தில் **வண்ணான்வாரியின் குறுக்கே எல்.எஸ்.0.100 கி.மீ–ல் தடுப்பணை** அமைக்கப்படும். (60 லட்சம் ரூபாய்)

19) ஒரத்தநாடு வட்டம், **அருமலை கிராமத்தில் அருமலை வடிகாலின் குறுக்கே எல்.எஸ்.1.250 கி.மீ–ல் தடுப்பணை** அமைக்கப்படும். (50 லட்சம் ரூபாய்)

20) ஒரத்தநாடு வட்டம், வெள்ளூர் மற்றும் தொண்டாரம்பட்டு கிராமங்களில் **பட்டுவானாச்சி வடிகாலின் குறுக்கே முறையே**

**எல்.எஸ்.6.50 கி.மீ மற்றும் எல்.எஸ்.11.00 கி.மீ–ல் தடுப்பணை** அமைக்கப்படும். (95 லட்சம் ரூபாய்)

**மருத்துவ வசதிகள்**

21) JICA திட்டத்தின் கீழ் **தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 3.28** கோடி ரூபாய் மதிப்பில் **அதிநவீன உபகரணங்கள்** வழங்கப்படும்.

22) மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, ஒரு கோடி ரூபாய் மதிப்பில் **தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (HUB),** அதனைச் சார்ந்த **கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருவையாறு மருத்துவமனைகள் (Spoke) மாரடைப்பு சிகிச்சைப் பிரிவுகள்** அமைக்கப்படும்.

23) தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 16 கோடி ரூபாய் மதிப்**பில் புற்று நோய்க்கான கதிரியக்க சிகிச்சை கருவி** அமைக்கப்படும்.

24) தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 12 கோடி ரூபாய் மதிப்பில் **சீமாங்க் மையம் ஒப்புயர்வு மையமாக** தரம் உயர்த்தப்படும்.

25) அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனையில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் **கட்டணமில்லா கருத்தரிப்பு மையம்** அமைக்கப்படும்.

26) தஞ்சாவூர் மாவட்டத்தில் 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் **புதியதாக மருந்து கிடங்கு** அமைக்கப்படும்.

27) தஞ்சாவூர் மாவட்டத்தில் பணியாற்றும் 309 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு **மருத்துவ புள்ளி விவரங்களை பதிவு செய்திட**

**30.90 இலட்சம்** ரூபாய் **மதிப்பில் கையடக்க கணினிகள்** (Tablets) வழங்கப்படும்.

28) சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் **31.35** இலட்சம் ரூபாய் மதிப்பில் **விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள்** வழங்கப்படும்.

29) பட்டுக்கோட்டை மற்றும் ஒரத்தநாடு அரசு மருத்துவமனைகளில் **4.20** கோடி ரூபாய் மதிப்பில் **முதல்நிலை பரிந்துரை மையம்** அமைக்கப்படும்.

30) பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் **Diplomate of National Board (DNB) மருத்துவ பட்ட மேற்படிப்புடன்** 1.49 கோடி ரூபாய் மதிப்பில் **சீமாங் அறுவை அரங்கம் மற்றும் பச்சிளம் குழந்தைகள் பிரிவு** ஏற்படுத்தப்படும்.

31) கும்பகோணம் அரசு மருத்துவமனையில் **1.25** கோடி ரூபாய் மதிப்பில் **டயாலிசிஸ், எண்டோஸ்கோப் உள்ளிட்ட அதிநவீன உபகரணங்கள், பயன்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களுக்கான தொற்று கிருமி நீக்கு பிரிவு, புற்றுநோயாளிகளுக்கான வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிச்சை மையம்** அமைக்கப்படும்.

32) வல்லம் அரசு மருத்துவமனையில் **16** இலட்சம் ரூபாய் மதிப்பில் **நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம்** அமைக்கப்படும்.

**புறவழிச்சாலை**

33) கும்பகோணம் நகருக்கான **மூன்றாம் கட்ட புறவழிச்சாலை 9.42.கி.மீ நீளத்திற்கு அமைக்கப்படும்.** இதற்கான நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. (28.00 கோடி ரூபாய்)

**பாலங்கள்**

34) **சின்னப்புலிக்காடு–ராகவாம்பாள்புரம்** சாலையில் கி.மீ. 0/2–ல் **பாலம்** கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)

35) **சாலியமங்கலம் – சடையர்கோயில்** சாலையில் கி.மீ. 7/4–ல் **சிறு பாலம்** கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)

36) **ஊரணிபுரம் – கரியவிடுதி** சாலையில் கி.மீ. 0/8–ல் **பாலம்** கட்டப்படும். (1.60 கோடி ரூபாய்)

37) **இடையாத்தி கிராமத்தில்** வெள்ளாளர் தெரு மற்றும் ஆதி திராவிடர் தெருவிற்கிடையே **G.A வாய்க்காலின் குறுக்கே பாலம்** கட்டப்படும். (1.75 கோடி ரூபாய்)

38) **திருநீலக்குடி – கடலங்குடி** சாலையில் கி.மீ. 0/6–ல் **பாலம்** கட்டப்படும். (1.98 கோடி ரூபாய்)

39) அய்யம்பேட்டை – கணபதி அக்ரஹாரம் சாலை கி.மீ.1/10ல் குறுக்கிடும் **காவேரி ஆற்றின் குறுக்கே கணபதி அக்ரஹாரத்தில் மதிப்பில்** பாலம் கட்டப்படும். (10.80 கோடி ரூபாய்)

40) **திருவிசைநல்லூர் – திருபுவனம் சாலையில்** கி.மீ.0/2ல் **பாலம்** கட்டப்படும்.
(2.60 கோடி ரூபாய்)

41) **புதுவிடுதி – வெட்டுவாக்கோட்டை – கறம்பக்குடி** சாலையில் கி.மீ.3/6ல் **பாலம்** கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)

42) ரெட்டிப்பாளையம் கிராமத்தில் **கொற்கை பஞ்சாயத்துக்கும் சேசம்பாடி பஞ்சாயத்துக்கும் இடையில்** கி.மீ.0/4ல் **பாலம்** கட்டப்படும். (1.98 கோடி ரூபாய்)

43) **நெய்வாசல் – அரசப்பட்டு – ஊசிமதகு** சாலையில் கி.மீ.4/6ல் **பாலம்** கட்டப்படும். (1.97 கோடி ரூபாய்)

44) **ஆலத்தூர் – புலவஞ்சி சாலையில்** கி.மீ.1/2ல் **பாலம்** கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)

**திட்ட அறிக்கை**

45) **திருவையாறு நகருக்கு புறவழிச்சாலை** அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

46) தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை – அறந்தாங்கி – சாயல்குடி மாநில நெடுஞ்சாலை எண்.29யினை அதாவது **தஞ்சாவூர் மாவட்ட சாலை பகுதி பட்டுக்கோட்டை முதல் ஆவணம் கைகாட்டி வரை கிமீ 0/0–69/2 வரை 69.20 கி.மீ நீளம்** தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தி **நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துவதற்கு 3.2 கோடி ரூபாய் செலவில் தளஆய்வு மற்றும் சாத்தியக்கூறு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.**

47) **அய்யம்பேட்டை – கணபதிஅக்ரஹாரம் சாலை**யில் **கிமீ. 0/4** குறுக்கிடும் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே அய்யம்பேட்டையில் **உயர்மட்ட பாலம் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.**

~~48)~~ திருக்காட்டுப்பள்ளி – செங்கிபட்டி – பட்டுக்கோட்டை சாலை (SH – 99) கி.மீ. 5/10–6/2ல் **வெண்ணாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.**

* * * * *